பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

05 02 2026 THURSDAY 7 15 AM

தலைப்புச் செய்திகள்

1. மணிப்பூரில் புதிதாக பதவியேற்றுள்ள அரசு அம்மாநிலத்தின் வளர்ச்சிக்கு அயராது பாடுபடும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

2. தமிழ்மொழி குறித்து மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன், இழிவான சொற்களைப் பயன்படுத்தியதாக மாநிலங்களவையில் உறுப்பினர் திரு. கமல்ஹாசன் தவறான தகவலைத் தெரிவித்துள்ளதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

3. கடந்த 10 ஆண்டுகளில் வானிலை முன்னறிவிப்பு குறித்த தகவல்களை துல்லியமாக அளிப்பது 30 முதல் 40 சதவீத அளவிற்கு மேம்பட்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

4. சீன அதிபர் திரு. ஸீ-ஜின்பிங் உடன் வர்த்தகம், பாதுகாப்பு, எரிசக்தி துறைகள் தொடர்பாக அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் தொலைபேசி வாயிலாக விவாதித்தார்.

5. மகளிர் ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெற உள்ள இறுதி ஆட்டத்தில் தில்லி அணி - பெங்களூரு அணியை எதிர்கொள்கிறது.

>>>>>><<<<<<

மணிப்பூரில் புதிதாக பதவியேற்றுள்ள அரசு அம்மாநிலத்தின் வளர்ச்சிக்கு அயராது பாடுபடும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், மணிப்பூர் முதலமைச்சராக பதவியேற்றுக்கொண்ட திரு. Yumnam Khemchand Singh, துணை முதலமைச்சர்களாக பதவியேற்றுக்கொண்ட திருமதி Nemcha Kipgen மற்றும் திரு. Losii Dikho ஆகியோருக்கும் தமது வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்வதாக கூறியுள்ளார்.

அவர்கள் மணிப்பூர் மாநில மக்களின் செழுமைக்கு மேலும் பாடுபடுவார்கள் என்று தாம் நம்புவதாகவும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

>>>>>><<<<<<

நாட்டின் முதலாவது கூட்டுறவு அடிப்படையிலான ஓட்டுநர்களுக்கான தளமான பாரத் டாக்சியை மத்திய கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. அமித் ஷா இன்று தொடங்கி வைக்கிறார்.

இதுகுறித்து அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், இதன் மூலம் ஓட்டுநர்களுக்கு மருத்துவக் காப்பீடு, விபத்துக் காப்பீடு உள்ளிட்ட பலன்கள் கிடைக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஓட்டுநர்களுக்கான லாபத் தொகை எந்தவித பிடித்தமும் இன்றி நேரடியாக வழங்கப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

தமிழ்மொழி குறித்து மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன், இழிவான சொற்களைப் பயன்படுத்தியதாக மாநிலங்களவையில் உறுப்பினர் திரு. கமல்ஹாசன் தவறான தகவலைத் தெரிவித்துள்ளதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இதுகுறித்து நிதியமைச்சர் அலுவலகம் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், நியூஸ்தமிழ் செய்தி ஊடகமும் எந்தவொரு அடிப்படை சரிபார்ப்பும் இன்றி அமைச்சரின் பெயரில் தவறான ஒரு கருத்தை தவறாக சித்தரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு மார்ச் மாதம் நடைபெற்ற நிகழ்வில் திரு. ஈ.வெ. ராமசாமி நாயக்கரின் கூற்றையே நிதியமைச்சர் மேற்கோள் காட்டியதாகவும், அது அவரது சொந்தக் கருத்தல்ல என்றும் கூறப்பட்டுள்ளது.

பொதுமக்களை தவறாக வழி நடத்தியதற்காகவும், கௌரவத்திற்குரிய மத்திய அமைச்சரின் பேச்சை திரித்து கூறியதற்காகவும் அந்த செய்தி நிறுவனம் உடனடியாக மன்னிப்பு கோர வேண்டும் என்று மத்திய நிதியமைச்சர் அலுவலகம் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

கடந்த 10 ஆண்டுகளில் வானிலை முன்னறிவிப்பு குறித்த தகவல்களை துல்லியமாக அளிப்பது 30 முதல் 40 சதவீத அளவிற்கு மேம்பட்டுள்ளதாக மத்திய புவி அறிவியல் துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் கேள்வி நேரத்தின்போது இதனைத் தெரிவித்த அவர், அனைத்துவிதமான வானிலை நிகழ்வுகளை 5 நாட்களுக்கான முன்னறிவிப்புகளாக வழங்குவதற்கான முறைகள் வலுப்படுத்தப்பட்டுள்ளதாக கூறினார்.

கர்நாடக மாநிலத்தில் மட்டும் மூன்றரை லட்சத்திற்கும் மேற்பட்ட விவசாயிகளின் வாட்ஸப் எண்ணுக்கு வானிலை குறித்த தகவல்கள் அனுப்பப்படுவதாக டாக்டர் ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

>>>>>><<<<<<

கடந்த 5 ஆண்டுகளில் 71 ஆயிரத்து 963 திரைப்படங்கள் தணிக்கை செய்யப்பட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக மக்களவையில் கேள்வி நேரத்தின் போது பதிலளித்துப் பேசிய அவர், நாட்டின் இறையாண்மை, ஒற்றுமை போன்ற சட்டப்பூர்வ அம்சங்களை மீறும் வகையிலும், அவதூறு, குற்றத்தை தூண்டுதல் போன்ற காட்சிகள் இடம்பெற்றால் மட்டுமே அதனை நீக்குவதற்கோ அல்லது மாற்றியமைப்பதற்கோ பரிந்துரைக்கப்படுவதாக கூறியுள்ளார்.

மற்றொரு கேள்விக்கு பதிலளித்துப் பேசிய அவர், ஆன்லைன் சான்றிதழ் முறை அமல்படுத்தப்பட்ட பிறகு, திரைப்படங்களுக்கு சான்றிதழ் வழங்குவதற்கான கால அவகாசம் 18 நாட்களாக குறைக்கப்பட்டுள்ளது என்றும், முன்னதாக இது 48 நாட்களாக இருந்தது என்றும் தெரிவித்துள்ளார்.

குறும்படங்களுக்கு 3 நாட்களுக்குள் தணிக்கை சான்றிதழ் வழங்கப்படுவதாகவும் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

>>>>>><<<<<<

ஒடிசாவில் பயணம் மேற்கொண்டு வரும் குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு, இன்று காலை Rairangpur-ல் உள்ள ஸ்ரீஜெகன்நாதர் கோயிலில் தரிசனம் செய்ய உள்ளார். அதைத் தொடர்ந்து தமது சொந்த கிராமமான பகத்பூருக்கு செல்லும் அவர், அங்கு பள்ளி மாணவர்களுடன் உரையாட உள்ளார். பின்னர் இன்று மாலை தமது சொந்த மாவட்டமான மயூர்பஞ்ச்சில் உள்ள சிமிலிபால் புலிகள் காப்பத்திற்கு செல்கிறார்.

அங்கு அவர் பழங்குடியின பெண்களுடனும், இளைஞர்களுடனும் உரையாட உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>>><<<<<<

மேற்குவங்கத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் தொடர்பான வழக்கில் இம்மாதம் 9ஆம் தேதிக்குள் பதிலளிக்குமாறு தேர்தல் ஆணையத்திற்கும், மேற்குவங்க தலைமைத் தேர்தல் அதிகாரிக்கும் உச்சநீதிமன்றம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

இது தொடர்பாக மேற்குவங்க முதலமைச்சர் செல்வி மம்தா பானர்ஜி தாக்கல் செய்த மனுவை விசாரித்த தலைமை நீதிபதி திரு. சூர்யகாந்த், நீதிபதிகள் Joymalya Bagchi, Vipur M. Pancholi ஆகியோர் அடங்கிய அமர்வு இதற்கான உத்தரவைப் பிறப்பித்தது.

முன்னதாக இவ்வழக்கில் ஆஜராகி வாதாடிய செல்வி மம்தா பானர்ஜி, வாக்காளர் பட்டியலில் பெயர் இடம்பெறுவதற்கு ஆதாரமாக ஆதார் அட்டைகளை மட்டும் ஏற்றுக்கொள்ள தேர்தல் அதிகாரிகளுக்கு அறிவுறுத்துமாறு கேட்டுக்கொண்டார்.

>>>>>><<<<<<

கோவா புத்தகத் திருவிழா நேற்று பனாஜியில் தொடங்கியது.

D.B. பண்டோட்கர் மைதானத்தில் 5 நாட்கள் நடைபெறும் இந்தப் புத்தக திருவிழாவை கோவா முதலமைச்சர் திரு. பிரமோத் சவாந்த் தொடங்கி வைத்தார்.

பின்னர் அங்குள்ள புத்தக அரங்குகளைப் பார்வையிட்ட அவர், புத்தக ஆசிரியர்களுடன் உரையாடினார்.

இந்த புத்தக திருவிழாவில் ஆங்கிலம், கொங்கனி, மராத்தி, ஹிந்தி ஆகிய மொழிகளில் 200க்கும் மேற்பட்ட பதிப்பாளர்கள் அரங்குகளை அமைத்துள்ளனர்.

சர்தார் வல்லபாய் பட்டேலின் 150வது பிறந்த தினத்தையொட்டி சிறப்பு அரங்கமும் இடம்பெற்றுள்ளது.

குழந்தைகளுக்கான பயிலரங்குகளும், இசை நிகழ்ச்சிகளும் நடைபெற்று வருகின்றன.

இம்மாதம் 8ஆம் தேதி வரை கோவா புத்தக கண்காட்சி நடைபெற உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>>><<<<<<

ஜம்மு-கஷ்மீர் கிஷ்துவார் மாவட்டத்தில் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட நடவடிக்கையில் தீவிரவாதி ஒருவர் கொல்லப்பட்டார்.

சத்ரு பகுதியில் தீவிரவாதிகளின் நடமாட்டம் இருப்பதாக கிடைத்த தகவலையடுத்து, பாதுகாப்புப் படையினர் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டபோது அவர் கொல்லப்பட்டார்.

இரண்டு துணை சிறப்புப் படையினர் உள்ளிட்ட பாதுகாப்புப் படையினர் இந்த தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>>><<<<<<

ஜம்மு-கஷ்மீரில் அடுத்த வாரம் பெரும்பாலும் வறண்ட வானிலையே நிலவக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மலைப்பகுதிகளில் லேசான பனிப்பொழிவு இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் கூறியுள்ளது.

இம்மாதம் 9 மற்றும் 10ஆம் தேதிகளில் லேசான மழை பெய்யும் அல்லது பனி நிலவக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

>>>>>><<<<<<

சீன அதிபர் திரு. ஸீ-ஜின்பிங் உடன் வர்த்தகம், பாதுகாப்பு, எரிசக்தி துறைகள் தொடர்பாக அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் தொலைபேசி வாயிலாக விவாதித்தார்.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், சீனா மற்றும் தைவானுக்கு தாம் ஏப்ரல் மாதத்தில் மேற்கொள்ள பயணம், ரஷ்யா-யுக்ரைன் இடையேயான போர், ஈரானில் நிலவும் சூழல், அமெரிக்கா-சீனா இடையேயான எரிசக்தி ஒத்துழைப்பு உள்ளிட்டவை குறித்து தாம் சீன அதிபருடன் விவாதித்ததாக குறிப்பிட்டுள்ளார்.

>>>>>><<<<<<

மகளிர் ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெற உள்ள இறுதி ஆட்டத்தில் தில்லி அணி - பெங்களூரு அணியை எதிர்கொள்கிறது. வதோதராவில் நடைபெற உள்ள இப்போட்டி இரவு மணி 7.30க்கு தொடங்குகிறது.

>>>>>><<<<<<

19 வயதுக்குட்பட்டோருக்கான உலக கோப்பை ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

ஹராரே-யில் நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில், இந்தியா 7 விக்கெட் வித்தியாசத்தில் ஆப்கானிஸ்தானை வென்றது.

இப்போட்டியில், டாஸ் வென்று முதலில் பேட் செய்த ஆப்கானிஸ்தான் நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 4 விக்கெட் இழப்புக்கு 310 ரன் எடுத்தது.

பின்னர் பேட் செய்த இந்தியா, 41 புள்ளி ஒரு ஓவரில் 3 விக்கெட் இழப்புக்கு 311 ரன் எடுத்து வெற்றிபெற்றது.

Aaron George 104 பந்துகளில், 115 ரன் குவித்தார்.

Vaibav Suryavanshi 33 பந்துகளில் 68 ரன் எடுத்தார்.

ஹராரேயில் நாளை நடைபெறவுள்ள இறுதிப்போட்டியில் இந்தியா - இங்கிலாந்தை எதிர்கொள்கிறது.

>>>>>><<<<<<

உலக கோப்பை ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டிக்கான பயிற்சி ஆட்டத்தில், இந்தியா 30 ரன் வித்தியாசத்தில் தென்னாப்பிரிக்காவை வென்றது.

நவிமும்பையில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் பேட் செய்த இந்தியா, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 5 விக்கெட் இழப்புக்கு 240 ரன் எடுத்தது.

241 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய தென்னாப்பிரிக்கா 20 ஓவலில் 7 விக்கெட் இழப்புக்கு 210 ரன் மட்டுமே எடுத்து தோல்வியடைந்தது.

>>>>>>END<<<<<<